**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் - 2020**

---

## 1. நிதி அறிக்கைகள்

### 1.1. அபிப்பிராயம்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1995 இன் 29 ஆம் இலக்க இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 45.6 மில்லியன் தொகை மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 14.1 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 59.7 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இதற்கு மீண்டெழும் அரச உதவு தொகைகளின் அதிகரிப்பு பிரதான காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | தெகிவளை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தில் 5 மாடிகளைக் கொண்ட தலைமைத்துவத் தர விருத்தி நிலையக் கட்டட நிர்மாணத்திற்காக 21ம் நூற்றாண்டுக்கான உயர்கல்வித் திட்டத்தின் கீழ் ரூபா 512 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தபோதிலும் 21 பெப்ரவரி 2017 இல் ரூபா 113.8 மில்லியன் செலவில் 3 மாடிகள் மட்டும் பூர்த்தியாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. ஏனைய இரண்டு மாடிகளும் பூரணப்படுத்தப்படாமயினால் குறித்த கட்டடம் 30 செப்தம்பர் 2021 வரை பாவனைக்கு உட்படுத்தப் படாமல் காணப்பட்டதுடன் பொருத்தப்பட்ட உபகரணங்களுக்கான உத்தரவாதக் காலமும் நிறைவுற்று இருந்தது. | 21ம் நூற்றாண்டுக்காகன உயர்கல்வித் திட்டத்தின் 2ம் கட்டம் முன்மொழியப்பட வேண்டி இருந்ததனால் குறித்த தாமதம் ஏற்பட்டது. | குறிப்பிட்ப்பட்ட நோக்கத்திற்காக கட்டப்பட்ட கட்டடங்கள் உரிய காலத்தில் பாவனைக்கு உட்படுத்துவது முகாமையின் பொறுப்பாகும். |
| ஆ. | 9 மாவட்டங்களில் இயங்கும் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் காணிகளை சட்டபூர்வமாக உரிமையாக்குவதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | இக்கூற்றை ஏற்றுக்கொள்வதுடன் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் காணிகளை சட்டபூர்வமாக உரிமையாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | சட்டபூர்வமாக உரிமையாக்குவதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படல் வேண்டும். |
| இ. | தனியார் ஒப்ந்ககாரர் ஒருவருக்கு 2014 – 2018 வரை மேற்கொள்ளப்பட்ட 8 ஒப்பந்தங்களுக்காக ரூபா 6,987,493 பெறுமதி சேர்க்கப்கட்ட வரிக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த ஒப்ந்ககாரர் பெறுமதி சேர் வரிக்காக உள்நாட்டு | நிதியாண்டில் ரூபா 6,038,581 பெறுமதி சேர்க்கப்கட்ட வரிக் கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்த ஒப்ந்ககாரரால் ரூபா 6,987,493 செலுத்துவதற்குப் பரிந்துரைக்கப்பட்டது. | பெறுமதி சேர்க்கப்கட்ட வரிக் கொடுப்பனவு செய்யப்பட முன்னதாக பதிவுகள் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| இறைவரித் திணைக்களத்தில் பதிவுசெய்து இருக்கவில்லை. இருப்பினும் அத்தொகையினை அறவிடுவதற்கு குறித்த நிதியாண்டில் எந்தவித செயற்பாடுகளும் முன்னெடுக்கப் பட்டிருக்கவில்லை. | | |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அ. தெகிவளை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தில் மின்சார செலவினைக் குறைத்துக் கொள்வதற்காக ரூபா 19.8 மில்லியன் செலவில் சூரியப்படல் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் 07 ஜுன் 2019 இல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கூடுதலான மின்சாரம் கிடைக்காமையினால் குறித்த திட்டம் நடைமுறைப்படுத்த முடியாமல்ப் போனது. இருப்பினும் ரூபா 2.5 மில்லியன் அனாவசிய மின்சார செலவாக ஜுன் 2019 தொடக்கம் திசம்பர் 2020 வரை ஏற்பட்டிருந்தது. | தாமதம் இருப்பினும் இதேபோன்று கண்டி அம்பாறை மற்றும் காலியில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் வெற்றிகரமாக இயங்குகின்றன. | வேலை திட்டமிடப்படும்போது கூடிய கூடுதலான மின்சாரம் கிடைக்கக் கூடியவாறு திட்டமிடப்பட்டு இருக்க வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அ. உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக தலைமை அலுவலகம் உட்பட ஏனைய 17 நிறுவங்களுக்குமாக குறித்த நிதியாண்டில் ரூபா 135.6 மில்லியன் செலவில் 47 பெறுகைகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிதியாண்டில் எவையும் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்ட தொற்று நோய்ப்பரம்பல் காரணமாக பெரும்பாலான திட்டங்கள் செயற்படுத்தப்படவிலலை. இருப்பினும் சில திட்டங்களுக்கான பூர்வாங்க செயற்பாடுகள் முன்னெடுககப் படுகின்றன. | பெறுகைத் திட்டங்கள் முழுமையாக நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |